ஓம்சக்தி

குருவடி சரணம் திருவடி சரணம்

# ஆதிபராசக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

# பனிரெண்டாம் வகுப்பு

# தமிழ்

# வினாவங்கி






Padasalai

"நீங்கள் எதைச் செய்தாலும் புதுமையாகவும்,புதிராகவும் செய்ய வேண்டும்."

- அன்னையின் அருள்வாக்கு

முதுகலைத்தமிழ் ஆசிரியை
கோ.மாலினி



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# பொருளடக்கம்

## பனிரெண்டாம் வகுப்பு

## வினாவங்கி

| வ.எண் | பாடம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இயல் 1 | உயிரினும் ஓம்பப் படும் | 3-5 |
| 2. | இயல் 2 | பெய்யெனப் பெய்யும் மழை | 6-8 |
| 3. | இயல் 3 | சுற்றத்தார் கண்ணே உள | 9-11 |
| 4. | இயல் 4 | செல்வத்துள் எல்லாம் தலை | 13-15 |
| 5. | இயல் 5 | நாடென்ப நாட்டின் தலை | 15-17 |
| 6. | இயல் 6 | சிறுகை அளாவிய கூழ் | 18-20 |
| 7. | இயல் 7 | அருமை உடைய செயல் | 21-23 |
| 8. | இயல் 8 | எல்லா உயிரும் தொழும் | 24-26 |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# ஆதிபராசக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
# மேல்மருவத்தூர்
# பனிரெண்டாம் வகுப்பு
# இயல்:1
# உயிரினும் ஓம்பப்படும்

**1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1) மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்
க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது ங) வள்ளல்களைத் தந்தது
அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரிஇ) ங மட்டும் சரி ஈ) க,ங இரண்டும் சரி

2) பொதிகை என்பது எந்த மலையைக் குறிக்கும்,
அ) குற்றால மலை ஆ) விந்திய மலை இ) இமய மலை ஈ) சாமிமலை

3) சிற்பி பாலசுப்பிரமணியம் எந்நூலை மொழிபெயர்த்தமைக்காகச் சாகித்திய அகாதமி விருதினைப் பெற்றார்,
அ) அக்கினி ஆ) ஒளிப்பறவை இ) அக்கினிசாட்சி ஈ) சூரியநிழல்

4) கவிஞர் சிற்பி எழுதிய எந்தப் படைப்பிலக்கியத்திற்கு சாகித்திய அகாதமி விருது கிடைத்தது,
அ) ஒரு கிராமத்தின் கதை ஆ) ஒரு கிராமமே அழுதது இ) ஒரு கிராமத்தின் நதி
ஈ) ஒரு புளியமரத்தின் கதை

5) செந்தமிழ் எந்தப் புணர்ச்சி விதிகளின் அடிப்படையில் சரியாகப் புணரும்,
அ) ஈறுபோதல், இனமிகல் ஆ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல்
இ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல் ஈ) ஈறுபோதல்

6) வியர்வை வெள்ளம் இலக்கணக் குறிப்புத் தருக
ஆ) உவமையாகுபெயர் ஆ) கருவியாகு பெயர் இ) உருவகம் ஈ) உவமைத்

7) இவற்றுள் எது கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய நூல்,
ஆ) சூரிய காந்தி ஆ) சூரிய பார்வை இ) ஒளிப்பூ ஈ) சூரிய நிழல்

8) இளந்தமிழே என்னும் பாடல் நூலின் ஆசிரியர்
அ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஆ) பெருந்தெவனார் இ) தமிழண்ணல் ஈ) மு. வரதராசனார்

9) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தவள்
அ) கோப்பெருந்தேவி ஆ) வெண்மாள் இ) தமிழன்னை ஈ) ஔவையார்

10) .............. முதலான வள்ளல்களை ஈன்று தந்தவள் தமிழன்னை.
அ) சடையப்ப வள்ளல் ஆ) சீதக்காதி இ) பாரி ஈ) நெடுங்கிள்ளி

11) எம்மருமைச் செந்தமிழே உன்னையல்லால் ஏற்றதுணை வேறுண்டோ ? என்று பாடியவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஈ) திரு. வி. க

12) இளந்தமிழே என்னும் சிற்பி பாலசுப்பிரமணியத்தின் பாடலின் இடம்பெற்றுள்ள பாவகை
அ) நேரிசை ஆசிரியப்பா ஆ) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
இ) கலி விருத்தம் ஈ) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

13) செம்பரிதி இச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதியைக் கண்டறிக.
அ) ஈறுபோதல் ஆ) இனமிகல் இ) ஆதிநீடல் ஈ) முன்நின்ற மெய்திரிதல்

14) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே ? என்ற விதிக்குப் பொருத்தமான சொல்லைக் கண்டறிக.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

அ) உன்னையல்லால் ஆ) வானமெல்லாம் இ) செந்தமிழே ஈ) செம்பரிதி

15) இளந்தமிழே என்னும் கவிதை சிற்பி பாலசுப்பிரமணியத்தின் எக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது,
அ) சூரிய நிழல் ஆ) ஒரு கிராமத்து நதி இ) ஒளிப்பறவை ஈ) நிலவுப்பூ

16) இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

17) செய்யளை ஓர் உள்ளமைப்பாகக் கூறும் நூல்
அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) யாப்பருங்கலக்காரிகை ஈ) தண்டியலங்காரம்

18) காளைகளில் பல இனங்களைக் காட்டும் நூல்
அ) தொல்காப்பியம் ஆ) முல்லைக்கலி இ) புறநானூறு ஈ) பதிற்றுப்பத்து

19) பாடலின் தளத்தைப் பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணியைச் செய்வது
அ) தொடரியல் வடிவம் ஆ) ஒலிக்கோலம் இ) சொற்றொடர் நிலை ஈ) சொற்புலம்

20) தமிழ்மொழியின் நடை அழகியல் என்னும் கட்டுரையின் ஆசிரியர்
அ) தி.சு. நடராசன் ஆ) ஒளவை நடராசன் இ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஈ) தமிழண்ணல்

21) ................ இழுமெனும் மொழியால் விழுமியது பயக்கும் வகையின் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.
அ) தமிழில் ஆ) ஆங்கிலத்தில் இ) தெலுங்கில் ஈ) வடமொழியில்

22) மலரும் மணமும் போல கவிதையுடன் இரண்டறக் கலந்திருப்பது
அ) தமிழர்களின் அழகுணர்வு ஆ) தலைவன் தலைவியின் அன்புணர்வு
இ) வள்ளலின் வள்ளன்மையுணர்வு ஈ) பக்தர்களின் தெய்வ உணர்வு

23) அறியப்பட்ட வரலாற்றுக் காலத்தின் தொடக்கமாகத் தோற்றம் தருவது
அ) புராணம் ஆ) சங்க இலக்கியம் இ) கல்வெட்டு ஈ) நாணயம்

24) அழகு என்பது ................ செய்தி.
அ) மனிதரின் ஆ) பேரண்டத்தின் இ) காதலின் ஈ) கடவுளின்

25) அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருவது
அ) தொல்காப்பியம் ஆ) சங்க இலக்கியம் இ) புராணம் ஈ) மனிதநடத்தை

26) இலக்கியத்தின் ................ பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு.
அ) நயம் ஆ) பயன் இ) நிலை ஈ) ஈடுபாடு

27) அகன் ஐந்திணைகளைப் பேசுவது
அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) புறப்பொருள் வெண்பாமாலை

28) அந்நில மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்பஎன்று பாவகைகளோடு அறவியல் கருத்துகளை இணைத்துச்சொல்வது
அ) சங்க இலக்கியம் ஆ) பரிபாடல் இ) தொல்காப்பியம் ஈ) அகத்தியம்

29) கவிதையின் ................ நடை.
அ) இயங்காற்றல்தான் ஆ) அழகுதான் இ) பார்வைதான் ஈ) இயல்புதான்

30) நடைபெற்றியலும் என்பது தொல்காப்பியத்தின ................ வரும் சொற்றொடர்.
அ) கிளவியாக்கத்தில் ஆ) மொழியாக்கத்தில் இ) எழுத்து அதிகாரத்தில் ஈ) இவற்றில் எதுவுமில்லை

31) கடந்தடுதானை மூவிருங்கூடி என்று தொடங்கும் பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) பரிபாடல்

32) புணரின் புணராது பொருளே" பொருள்வயின் பிரியின் புணராது புணர்வே- என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்
அ) புறநானூறு ஆ) நற்றிணை இ) அகநானூறு ஈ) கலித்தொகை



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

33) நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை?என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல் அ) புறநானூறு ஆ) நற்றிணை இ) அகநானூறு ஈ) கலித்தொகை

34) ................ கலியில், காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.

அ) குறிஞ்சிக் ஆ) முல்லைக் இ) மருதக் ஈ) பாலைக்

35) கிடை என்னும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்களைச் சொல்லி அழைப்பவர்

அ) இந்திரா பார்த்தசாரதி ஆ) கி. ராஜநாராயணன் இ) ஜெயகாந்தன் ஈ) ஜெயமோகன்

36) தொகைநிலை,தொகைமொழி பற்றிப் பேசும் தொல்காப்பியத்தின் இயல்

அ) எச்சவியல் ஆ) இடையியல் இ) உவமையியல் ஈ) எழுத்தியல்

37) நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச் சடங்கு, சர்ச்சைக்கு உள்ளானது பற்றிப் பாடியவர்

அ) பேரெயின் முறுவலார் ஆ) வெள்ளைக்குடி நாகனார்இ) நரிவெரூஉத்தலையார் ஈ) கோவூர்கிழார்

38) இடுக வொன்றோ, சுடுக வொன்றோ,படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே?என்ற புறநானூறு அடிகளில் குறிப்பிடப்படும் மன்னர்

அ) அறிவுடைநம்பி ஆ) நம்பி நெடுஞ்செழியன்இ) செங்குட்டுவன் ஈ) கிள்ளிவளவன்

39) தொடியுடைய தோள் மணந்தனன் எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலின் ஆசிரியர்

அ) பேரெயின் முறுவலார் ஆ) பொன்முடியார்இ) கோவூர்கிழார் ஈ) வெள்ளைக்குடி நாகனார்

40) பேரெயின் முறுவலாரின் புறநானூற்றுப் பாடலில் இடம்பெற்றுள்ள பண்புகள்

அ) 16 ஆ) 18 இ) 15 ஈ) 14

41) தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் ................ முதன்மை ஆதாரம்.

அ) சங்க இலக்கியமே ஆ) சங்கம் மருவிய இலக்கியமேஇ) நீதி இலக்கியமே ஈ) காப்பியமே

42) தமிழ் அழகியல் என்னும் நூலின் ஆசிரியர்

அ) தி.சு. நடராசன் ஆ) ஔவை நடராசன் இ) தமிழண்ணல் ஈ) வல்லிக்கண்ணன்

43) ................ கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி. சு. நடராசன் குறிப்பிடத்தக்கவர்.

அ) திரைக் ஆ) திறனாய்வுக் இ) மொழிபெயர்ப்புக் ஈ) பேச்சுக்

44) தி.சு. நடராசன் ................ ஆகப் பணிபுரிந்தார்.

அ) மாவட்ட ஆட்சியர் ஆ) பேராசிரியர் இ) வழக்குரைஞர் ஈ) மருத்துவர்

45) மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது

46) தன்னேர் இலாத தமிழ்- இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

அ) அடிமோனை. அடி எதுகை ஆ) சீர் மோனை, சீர் எதுகை

47) இ) அடி எதுகை. சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடியோனை

48) அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்

அ) முத்துவீரியம் ஆ) வீரசோழியம் இ) மாறனலங்காரம் ஈ) இலக்கண விளக்கம்

49) கீழ்க்காண்பவற்றுள் வினையாலணையும் பெயர் எது,

அ) உயர்ந்தோர் ஆ) வந்தான் இ) நடப்பான் ஈ) உயர்ந்து

50) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல் எச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதி,

அ) கருங்குயில் ஆ) வெங்கதிர் இ) நெடுந்தேர் ஈ) முதுமரம்

51) தமிழ் தோன்றிய மலை

அ) குடகு ஆ) பொதிகை இ) இமயமலை ஈ) விந்தியமலை

52) காவியதர்சம் என்பது



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

அ) வடமொழி இலக்கணநூல் ஆ) புராணநூல் இ) வரலாற்று நூல் ஈ) மலையாள லக்கிய நூல்

53) பாரதியார் நெல்லையப்பருக்கு எழுதிய கடிதங்களைப் பதிப்பித்தவர்

அ) இளசைமணி ஆ) ரா.அ. பத்மநாபன் இ) கி. ராஜநாராயணன் ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர்

54) பாரதி நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதிய இடம், நாள்

அ) புதுச்சேரி, 19 ஜூலை 1915 ஆ) நெல்லை, 14 ஜூலை 1914

இ) கடலூர், 18 ஆகஸ்ட் 1914 ஈ) காரைக்கால், 19 ஜூலை 1915

55) நெல்லையப்பரை யார் காத்திட வேண்டும் என்கிறார் பாரதி,

அ) சிவன் ஆ) முருகன் இ) பராசக்தி ஈ) துர்க்கை

56) வம்சமணி தீபிகை என்னும் நூல் யாரைப் பற்றியது,

அ) சோழ மன்னர்களின் பரம்பரை வரலாறு ஆ) எட்டையபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு

இ) ஆங்கில ஆட்சியாளரின் அடக்குமுறைகளைக் கூறுவது ஈ) பாரதியின் வாழ்க்கை வரலாறு

57) பாரதியின் கடைசிக் கடிதம் யாருக்கு எழுதப்பட்டது,

அ) எட்டயபுரம் அரசருக்கு ஆ) நெல்லையப்பருக்கு

இ) குத்திகேசவருக்கு ஈ) சீனி. விசுவநாதனுக்கு

## 2.குறுவினா:

1.படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக- இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும்அவற்றிற்கான இலக்கணக் குறிப்பகளையும் எடுத்து எழுதுக.

2.கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

3.விடியல், வனப்பு இருசொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.

4.கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்கள் சிலவற்றை எழுதுக.

5.நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

6.பாடலின் தளத்தை ஏர் நடத்தி பண்படுத்திப் போகின்றனவை எவை?

7."கலை முழுமை" பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது?

## 3.சிறுவினா:

1."செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம் "தொடர்வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

2."ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

3.சங்கப்பாடல்கள் பலவற்றுள் அமைந்துள்ள மறுதலைத் தொடரியல் போக்குக்குச் சான்று தந்து விளக்குக.

4.சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் ? விளக்குக.

5. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.

அ)பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே - நன்னூல்

ஆ)மீண்டு மந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு
மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே - கூவி வா, வா - சிற்பி பாலசுப்பிரமணியம்

6. பொருள் வேற்றுமை அணியைச் சான்று தந்து விளக்குக

7. ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர்ஞாலத்(து) ? இப்பாடலில் பயின்று வரும் அணியை விளக்கு.

## 4.பெருவினா:

1. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2.கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.
3.பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று,சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க

# இயல்:2

# பெய்யெனப் பெய்யும் மழை

## 1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1.வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல் இ) பாறைகள்இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்
2.உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுபடுத்த முடியும் இத்தொடர் உணர்த்துவது
அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறதுஆ) பசுமைக்குழல் வாயுக்கள் அதிகமாகிறது
இ) காலநிலை மாறுபடுகிறது ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது
3.இயற்கைச் சமநிலையை நாம் சீர்குலைத்தன் விளைவே எதற்குக் காரணமாயிற்று
அ) பருவநிலை மாற்றம் ஆ) உடல்நிலை மாற்றம்இ) மண்ணின் மாற்றம் ஈ) இவற்றில் எதுவுமில்லை
4.உலகப்புவி நாள்
அ) ஏப்ரல் 21 ஆ) ஏப்ரல் 22 இ) ஜுன் 21 ஈ) ஜுலை 22
5.மாமழை போற்றுதும் என்ற பாடல் வரியைக் கூறியவர்
அ) திருவள்ளுவர் ஆ) கம்பர் இ) ஔவையார் ஈ) இளங்கோவடிகள்
6.நீரின்றி அமையாது உலகு என்னும் பாடல் வரியைப் பாடியவர்
அ) கம்பர் ஆ) திருவள்ளுவர் இ) நக்கீரர் ஈ) ஔவையார்
7.ஓக்கி என்பதன் தமிழ்ச்சசொல்
அ) வாயு ஆ) காற்று இ) கண் ஈ) வாய்
8.புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே ? என்றவர்
அ) டேவிட் கிங் ஆ) ஜான் டேவிட் இ) ஜான் மார்ஷல் ஈ) ஹென்றி
9.கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக இந்திய வானிலை ஆய்வுத்துறையினர் அறிவித்த ஆண்டு
அ) 2008 ஆ) 2009 இ) 2007 ஈ) 2018
10.நடுவண் அரசு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்த ஆண்டு
அ) 2005 டிசம்பர் 24 ஆ) 2005 டிசம்பர் 23இ) 2005 நவம்பர் 23 ஈ) 2005 ஜுலை 23
11.ஆனந்த் வேளாண் பல்கலைக்கழகம் எங்குள்ளது ,
அ) டெல்லி ஆ) குஜராத் இ) மும்பை ஈ) கொல்கத்தா
12.உலகச் சுற்றுச்சூழல் நாள்
அ) ஜுன் 5 ஆ) ஜுலை 5 இ) ஏப்ரல் 14 ஈ) மே 5
13.நிலத்தடி நீர்மட்டத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் ................ பங்கு இன்றியமையாதது.
அ) வண்டல் மண்ணின் ஆ) கரிசல் மண்ணின் இ) செம்மண்ணின் ஈ) மணலின்
14.நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்
15.பகலும் இரவும் சந்திப்பது
அ) இரவு ஆ) அந்தி இ) வைகறை ஈ) யாமம்
16.நீர்நிலையில் இருந்து ஒளிக்கதிர் நீரை எப்படி எடுத்துக்கொண்டது,
அ) கரங்களால் பருகி ஆ) நீரில் மூழ்கி இ) உதடுகள் குவித்து ஈ) குவளையில் பிடித்து

17.அய்யப்ப மாதவன் இயங்கி வரும் துறைகள்
அ) இதழியல் துறை, திரைத்துறை ஆ) கல்வித்துறை, இதழியல் துறை
இ) இசைத்துறை,இதழியல் துறை ஈ) ஒளித்துறை, திரைத்துறை
18.பிறகொருநாள் கோடை என்னும் கவிதை எடுக்கப்பட்டதொகுப்பு
அ) மழைக்குப் பிறகும் மழை ஆ) நானென்பது வேறொருவன்இ) நீர்வெளி ஈ) அய்யப்பமாதவன் கவிதைகள்
19.அய்யப்ப மாதவனின் "இன்று" என்பது
அ) கவிதைத் தொகுப்பு ஆ) கவிதைக் குறும்படம்இ) ஆவணப்படம் ஈ) புதினம்
20.பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) வினைத் தொகை ஆ) உரிச்சொல் தொடர்
இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
21.ஆர்கலி என்ற சொல்லின் பொருள்
அ) சூரியன் ஆ) வெள்ளம் இ) கடல் ஈ) நிலா
22.நெடுநல்வாடையை இயற்றியவர்
அ) கபிலர் ஆ) பரணர் இ) நக்கீரர் ஈ) மோசிகீரனார்
23.நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன்
அ) சோழன் கரிகாலன் ஆ)சேரன் செங்குட்டுவன்இ)பாண்டியன் நெடுஞ்செழியன் ஈ) பறம்புமலை பாரி
24.நக்கீரரின் தந்தை
அ) மதுரைக்கணக்காயனார் ஆ) மாங்குடிமருதனார்இ) வெள்ளைக்குடிநாகனார் ஈ) இவர்களில் எவருமிலர்
25.நெடுநல்வாடை ................ நூல்களுள் ஒன்று.
அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு இ) பதினெண்கீழ்க்கணக்கு ஈ) நீதி
26.நெடுநல்வாடை ................ அடிகளைக் கொண்டது.
அ) 144 ஆ) 150 இ) 188 ஈ) 196
27.நெடுநல்வாடை அமைந்துள்ள பா
அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) விருத்தப்பா
28.கூதிர்ப்பருவத்திற்குரிய மாதங்கள்
அ) தை, மாசி ஆ) பங்குனி, சித்திரை இ) ஐப்பசி, கார்த்திகை ஈ) மார்கழி, தை
29.கண்ணி என்பது
அ) கழுத்தில் அணியும் மாலை ஆ) தலையில் சூடும் மாலை
இ) கையில் அணியும் அணிகலன் ஈ) காலில் அணியும் தழல்
30.கூதிர்ப் பாசறை என்பது
அ) போர்மேற் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படைவீடு
ஆ) போர்மேற் சென்ற அரசன் தோற்றுப் பதுங்கும் படைவீடு
இ) தலைவனும் தலைவியும் குளிர்காலத்தில் தங்கும் வீடு
ஈ) போரில் காயம் அடைந்த மன்னன் சிகிச்சை பெறுமிடம்
31.ஆயர் ................ மாலையைத் தலையில் சூடியிருந்தனர்.
அ) அத்தி ஆ) முல்லை இ) காந்தள் ஈ) குறிஞ்சி
32.முல்லை நிலத்தில் குளிரால் நடுங்கியவை
அ) பறவைகள் ஆ) குரங்குகள் இ) பசுக்கள் ஈ) எருதுகள்
33."மா" என்பதன் பொருள்
அ) பறவை ஆ) விலங்கு இ) வானம் ஈ) பூமி
34.உத்தம சோழன் அவர்களின் இயற்பெயர்
அ) செல்வன் ஆ) செயராஜ் இ) செல்வராஜ் ஈ) செல்லத்துரை
35.முதல்கல் சிறுகதை இடம் பெற்ற தொகுப்பு



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

அ) ஆரம்பம் இப்படித்தான் ஆ) சிந்து டீச்சர்இ) தஞ்சை சிறுகதைகள் ஈ) குருவிமறந்த வீடு

36.முதல்கல் சிறுகதையின் ஆசிரியர்

அ) புதுமைப்பித்தன் ஆ) உத்தமசோழன் இ) ஜானகிராமன் ஈ) சுஜாதா

37.காளியப்பன் தன் மகளைத் திருமணம் முடித்துக் கொடுத்ததாகக் கூறிய ஊர்

அ) வானமாதேவி ஆ) உலகளந்தாள் தேவி இ) சூரப்பள்ளம்

ஈ) கிழக்குக்கரை

38.தஞ்சைச் சிறுகதைகள் என்னும் தொகுப்பினுக்கு உரியவர்

அ) செல்வராஜ் ஆ) சோலை சுந்தரப் பெருமாள் இ) மேலாண்மை பொன்னுசாமி ஈ) இவர்களில் எவருமிலர்

39.தமிழில் திணைப்பாகுபாடு ................ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

40.உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

41.யார், எது, ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணைஇ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

41.உலக மொழிகள் அனைத்திலும் ................ மிகுதி என்பர்.

அ) பெயர்ச்சொற்களே ஆ) வினைச்சொற்களே இ) இடைச்சொற்களே ஈ) உரிச்சொற்களே

## 2.குறுவினா:

1.“இனநிரை” பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.

2.“நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது”விளக்கம் தருக.

3.மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?

4.உயர்திணை பன்மை பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்புகளை எழுதுக.

5.ஆளுக்கொரு மரம் வளர்ப்போம் என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

6.மனிதன் தன் பேராசைக் காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவைஇன்று சந்தித்து கொண்ழருக்கிறான் -இரு தொடர்களாக ஆக்குக.

7.கார்பன் அற்ற ஆற்றல்கள் யாவை?

## 3.சிறுவினா:

1.“நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து
உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்” இக்கவிதையின் அடி
“தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரொனே” என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றிஎழுதுக.

2.வாடைக் காலத்தில் கோலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினார்?

3.கூதிர் காலத்தின் தன்மையை நெடுநல்வாடை குறிப்பிடுவன யாவை?

4.மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

5.பேரிடர் மேலாண்மை ஆணையம் -விளக்கம் தருக.

6.இடர்பாகுபாடு தொடர் அமைப்பிற்கு இன்றியமையாதது என்பதைப் பாடப்பகுதியிலிருந்து சான்று காட்டுக.

7.வாகைத்திணையை விளக்குக:

8.“வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம்” இப்பாடலில் பயின்று வரும் துறையை விளக்குக.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

### 4.பெருவினா:

1. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.
2. "நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து" என்னும் தலைப்பில் சுற்றுச் சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன்நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
3. பொறுப்புணர்ச்சியின்றி இருந்தஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தைவிவரிக்க.

# இயல்:3

# சுற்றத்தார் கண்ணே உள

### 1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1.சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள் சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன.
அ)அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்இ)மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்
2.எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது
அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறைஇ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை
3.குடும்பம் என்னும் சொல் முதன்முதலில் இடம் பெற்ற நூல்
அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல் இ) சிலப்பதிகாரம் ஈ) திருக்குறள்
4.தொல்காப்பியம் குறிப்பிடும் வாழிடங்கள்
அ) இல், மனை ஆ) மனை, குடில் இ) இல்,குரம்பை ஈ) இவற்றில் எதுவுமில்லை
5.அகநானூறு 346ஆவது பாடலில் வரும் நும்மனை என்பது
அ) கணவனின் இல்லம் ஆ) மனைவியின் இல்லம்இ) நற்றாய் இல்லம் ஈ) செவிலியின் இல்லம்
6.இன்றைய தொழிற்சமூகத்தில் பெரும்பான்மையாகக் காணப்படும் குடும்பம்
அ) தனிக்குடும்ப வகை ஆ) சமூக குடும்ப வகை இ) கூட்டுக்குடும்ப வகை ஈ) விரிந்த குடும்ப வகை
7.ஆதிக்குடிகளிடம் இருந்த முக்கியமான குடும்பமுறை
அ) தந்தைவழிக் குடும்பஆ) விரிந்தவழிக் குடும்ப இ) தனிக்குடும்ப முறை ஈ) பிரிந்தவழிக் குடும்பம்
8.குடும்பம் என்னும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை
அ) பெற்றோர் ஆ) திருமணம் இ) அரசு ஈ) இவற்றில் எதுவுமில்லை
9.சேரநாட்டு மருமக்கள் தாய்முறை பற்றிக் கூறும் நூல்
அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து இ) பரிபாடல் ஈ) பட்டினப்பாலை
10.தமிழர் குடும்பமுறை என்னும் கட்டுரையின் ஆசிரியர்
அ) சுப்ரமணிய பாரதி ஆ) சோமசுந்தர பாரதிஇ) பக்தவத்சல பாரதி ஈ) பழனிபாரதி
11.இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது யாது ,
அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்
12.தாகங்கொண்ட மீனொன்று என்ற தலைப்பில் தமிழில் மொழிப்பெயர்த்தவர்
அ) என்.சத்தியமூர்த்தி ஆ) என்.ஆர்.சத்தியமூர்த்தி இ) எஸ்.சத்தியமூர்த்தி ஈ)எம்.சத்தியமூர்த்தி

13.வருபவர் எவராயினும் செலுத்த வேண்டியதாக "விருந்தினர் இல்லம்" கூறுவது
அ) காணிக்கை ஆ) நன்டிகாடை இ) நன்றி ஈ) அன்பளிப்பு
14.உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்? யார் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன்,சுக்ரீவன் ஈ) இராமன், சவரி
15..................... தலைவன் குகன்.
அ) ஆயர் ஆ) வேடுவர் இ) பரதவர் ஈ) குறவர்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

16.தமிழர் நற்பண்பின் உயர்ச்சியாக இருப்பது .................. ஆகும்.
அ) புறநானூறு ஆ) திருக்குறள் இ) கம்பராமாயணம் ஈ) தொல்காப்பியம்
17.அன்னவன் உரை கேளா
அமலனும் உரை நேர்வான் -அன்னவன் யார்,
அ) குகன் ஆ) இராமன் இ) சுக்ரீவன் ஈ) வீடணன்
18.இளவல் உன் இளையான் இளவல் யார்?
அ) இலக்குவன் ஆ) குகன் இ) சுக்ரீவன் ஈ) வீடணன்
19.வீடணன் அடைக்கலமாகும் படலம் எந்தக் காண்டத்தில் உள்ளது,
அ) ஆரண்ய காண்டம் ஆ) கிட்கிந்தா காண்டம் இ) சுந்தர காண்டம் ஈ) யுத்த காண்டம்
20.குகப்படலம் இடம்பெற்றுள்ள காண்டம்
அ) அயோத்தியா காண்டம் ஆ) ஆரண்ய காண்டம்இ) கிட்கிந்தா காண்டம் ஈ)சுந்தரகாண்டம்
21.கம்பராமாயணத்தை இயற்றியவர்
அ) கம்பர் ஆ) சேக்கிழார் இ) ஒட்டக்கூத்தர் ஈ) அம்பிகாவதி
22.மேருமலையைச் சுற்றி வரும் கதிரவனின் மகன்
அ) சுக்ரீவன் ஆ) குகன் இ) வீடணன் ஈ) அனுமன்
23.கம்பராமாயணத்திற்குக் கம்பர் இட்ட பெயர்
அ) இராமபஜராணம் ஆ) இராமாவதாரம் இ) சீதாகல்யாணம் ஈ) இராமநவமி
24.கம்பரது காலம் .................. ஆம் நூற்றாண்டு.
அ) 1 ஆ) 11 இ) 12 ஈ) 13
25.கவிச்சக்கரவர்த்தி என்ற சிறப்புக்குரியவர்
அ) கம்பர் ஆ) புகழேந்தி இ) ஒட்டக்கூத்தர் ஈ) ஔவையார்
26.அஞ்ஞாடி என்னும் புதினத்திற்காகச் சாகித்திய அகாதமி விருது பெற்றவர்
அ) ரா.கி. ரங்கராஜன் ஆ) புதுமைப்பித்தன் இ) பூமணி ஈ) உத்தமசோழன்
27.பூமணி எழுதிய சிறுகதைத் தொகுப்பு
அ) அறுப்பு, வரப்புகள் ஆ) அறுப்பு,வயிறுகள்இ) நொறுங்கல், வாய்க்கால் ஈ)அறுப்பு, வாய்க்கால்
28.கிரயம் என்ற சொல்லின் பொருள்
அ) ஒப்பந்தம் ஆ) வாக்குறுதி இ) விலை ஈ) வாடகை
29.உரிமைத்தாகம் என்ற சிறுகதையின் ஆசிரியர்
அ) புதுமைப்பித்தன் ஆ) பூமணி இ) உத்தமசோழன் ஈ) சுஜாதா
30.உரிமைத்தாகம் என்னும் சிறுகதை எடுத்துரைப்பது
அ) நிலத்துடனான உறவு குடும்ப உறவை வலுப்படுத்துவதை
ஆ) வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட இழப்புகள்
இ) முதலாளித்துவம் தொழிலாளிகளை நசுக்குவதை ஈ) இவற்றில் எதுவுமில்லை
31.கடலின் பெரியது
அ) உற்ற காலத்தில் செய்த உதவிஆ) பயன் ஆராயாமல் ஒருவன் செய்த உதவி
இ) திணையளவு செய்த உதவி ஈ) இவற்றில் எதுவுமில்லை
32.திருக்குறள் என்பது
அ) ஆகுபெயர் ஆ) கருவியாகுபெயர் இ) அடையடுத்த ஆகுபெயர் ஈ) அடையடுத்த கருவியாகுபெயர்
33.திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தவர்
அ) வீரமாமுனிவர் ஆ) ஜி.யு.போப் இ) கால்டுவெல் ஈ) சார்லஸ் வில்கினிஸ்
34.ஏட்டுச்சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு
அ) 1912 ஆ) 1712 இ) 1612 ஈ) 1812
35.திருக்குறள் .................. ஆன நூல்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

அ) குறள் வெண்பா ஆ) சிந்தியல் வெண்பா இ) ஆசிரியப்பாவால் ஈ) கலிப்பாவால்
36.திருக்குறள் .................. நூல்களுள் ஒன்று.
அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டுஇ) பதினெண்கீழ்க்கணக்கு ஈ) பதினெண்மேற்கணக்கு
37.வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு எனப் பாடியவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) வெ. ராமலிங்கனார் ஈ) இராமலிங்க அடிகள்
38.வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே எனப் பாடியவர்
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) இராமலிங்க அடிகள் ஈ) வெ. இராமலிங்கனார்

## 2.குறுவினா:

1.சினத்தை ஏன் காக்க வேண்டும்?
2.நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
3.எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்.
4.ஞானத்தில் பெரியது எது
5.புக்கில்,தன்மனை -சிறு குறிப்பு வரைக.
6.மனந்தகம் என்றால் என்ன,.
7.காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.

## 3.சிறுவினா:

1.எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது குறள் வழி விளக்குக.
2.குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவாரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.
3.சடாயுவைத் தந்தையாக ஏற்று,இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
4.பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் ? விளக்கம் எழுதுக.
5.தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள்குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
6. உங்கள் குடும்பத்தின் உறவுமுறைப் பெயர்களை அட்டவணைப்படுத்தி எழுதுக.
7.ஏகதேச உருவக அணி யை விளக்குக:
8.அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக

## 4.பெருவினா:

1.பண்பின் படிமமாக படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதிவழி நிறுவுக.
2.செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.
3.குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறதுஎவ்வாறு விளக்குக.
4. உரிமைத்தாகம் கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் கதையைத் தொடர்ந்து உன் கற்பனையில் எழுதுக:



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# இயல்:4

# செல்வத்துள் எல்லாம் தலை

## 1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1) சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி
2) குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
3) திண்ணைப் பள்ளிக்கூடங்கள் எந்த நூற்றாண்டில் அதிகம் இருந்தன
அ) 12ஆம் ஆ) 18ஆம் இ) 19ஆம் ஈ) 17ஆம்
4) குருகுலம் என்பது
அ) ஆசிரியரின் அறை ஆ) குருக்கள் தங்கும் இடம் இ)துறவியரின் குடில் ஈ) ஆசிரியரின் வீடு
5) மன்றத்திற்கு வழங்கும் இன்னொரு பெயர்
அ) சபை ஆ) சங்கம் இ) கோட்டை ஈ) அம்பலம்
6) ஜைன மடங்களுக்கான பெயர்
அ) அம்பலம் ஆ) மன்றம் இ) திண்ணை ஈ) பள்ளி
7) பள்ளியென்னும் பெயர் எவ்வெவற்றிற்கெல்லாம் பொதுவாக வழங்கப்படும்
அ) பாடசாலை,ஆலயம் ஆ) பாடசாலை,விருந்தினர் கூடும் இடம்இ) பாடசாலை,மடங்கள்
ஈ) பாசறை,மடங்கள்
8) நெடுங்கணக்கு என்பது
அ) நீண்ட கணக்கு ஆ) பெருக்கல் கணக்கு இ) ஓலைச் சுவடி ஈ) அரிச்சுவடி
9) சட்டாம்பிள்ளை என்பவர் யார்,
அ) ஊரில் பெரியவர் ஆ) சண்டித்தனம் செய்பவர்
இ) தலைமை வகிக்கும் மாணவர் ஈ) பிடிவாதம் பிடிக்கும் மாணவர்
10) அக்ஷராப்பியாசம் என்றால்
அ) பாடம்படித்தல் ஆ) எழுத்தறிவித்தல் இ) மனனம் செய்தல் ஈ) ஏடு எழுதுதல்
11) எழுத்தாணிக்கு வழங்கும் வேறு பெயர்
அ) மடக்கெழுத்தாணி ஆ) குண்டெழுத்தாணி இ) ஊசி ஈ) எழுதுகோல்
12) டாக்டர் வ.சுப. மாணிக்கம் .................. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்தார்.
அ) சென்னை ஆ) மதுரை இ) மைசூர் ஈ) டெல்லி
13) தமிழ்த்தாத்தா என்னும் சிறப்புக்குரியவர்
அ) உ.வே.சா. ஆ) ம.பொ.சி. இ) தெ.பொ.மீ ஈ) மு.வ.
14) பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடித்தேடி அச்சில் பதிப்பிக்க அரும்பாடுபட்டவர்
அ) உ.வே.சா. ஆ) ம.பொ.சி. இ) தெ.பொ.மீ ஈ) மு.வ.
15) உ.வே.சா. நூலகம் அமைந்துள்ள இடம்

அ) திருவான்மியூர் ஆ) வடபழனிஇ) தஞ்சைகிழக்குவாசல் ஈ) மதுரைமேற்குவாசல்

16) சுரதா நடத்திய கவிதை இதழ்

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

17) விண்வேறு " விண்வெளியில் இயங்கு கின்ற வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு- தொடர் தரும் முழுமையான பொருள்

அ) விண்ணும்வெண்மதியும் வேறு வேறு ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு ஈ) விண், விணவெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர்,முகில் அனைத்தும் வேறு வேறு

18) உவமைக்கவிஞர் என்று சிறப்பிக்கப்படுபவர்

அ) சுரதா ஆ) வெ.ராமலிங்கனார் இ) அப்துல் ரகுமான் ஈ) மு.மேத்தா

19) சுரதா என்பதன் விரிவாக்கம்

அ) சுப்புரத்தினதாசன் ஆ)சுதாரகுநாததாசன்இ)சுப்பிரமணியரத்தினதாசன் ஈ)இவற்றில் இல்லை

20)சுரதாவின் இயற்பெயர்

அ) கோபால் ஆ) இராசகோபால் இ) துரைகோபாலன் ஈ) இராசகோபாலன்

21) கவிஞர் சி. மணியின் கவிதைகள் 1959 ஆம் ஆண்டு முதல் எந்த இதழில் வெளிவந்தது,

அ) விளக்கு ஆ) எழுத்து இ) நடை ஈ) ஒளிச்சேர்க்கை

22) கவிஞர் சி. மணி நடத்தி வந்த சிற்றிதழ்

அ) நடை ஆ) விளக்கு இ) யாப்பும் கவிதையும் ஈ) ஒளிச்சேர்க்கை

23) கவிஞர் சி. மணி மொழிப்பெயர்த்த சீன மெய்யியல் நூல்

அ) தாவோ ஜி ஜிங் ஆ) தாவோ லி ஜிங் இ) தாவோ தே ஜிங் ஈ) தாவோ ஸி ஜிங்

24) சி. மணி பேராசிரியராகப் பணியாற்றிய துறை

அ) தமிழ் ஆ) ஆங்கிலம் இ) கணிதம் ஈ) இயற்பியல்

25) காவினெம் கலனே " சுருக்கினெம் கலப்பை- இத்தொடரில் கலன் உணர்த்தும் பொருள்

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி

26) கற்றோரது செம்மாப்பு என்பதில் "செம்மாப்பு" பொருள்

அ) பெருமை ஆ) புகழ் இ) இறுமாப்பு ஈ) வெற்றி

27) புறநானூற்றுக்கு வழங்கும் வேறு பெயர்

அ) புறம்,புறப்பாட்டு ஆ) புறம்,புறப்பொருள் இ) நானூறு, புறப்பாட்டு ஈ) இவற்றில் இல்லை

28) வயங்குமொழி வித்தித்தாம் "வித்தி" என்பதன் பொருள்

அ) விதி ஆ) விதை இ) புத்தி ஈ) விதைத்து

29) தாழும் நிலை வரினும் கலங்காதவர்

அ) கல்வி கற்றோர் ஆ) செல்வம் உடையவர் இ)ஞானம் பெற்றவர் ஈ) செல்வாக்கு உடையவர்

30)ஔவையார் அகநானூற்றில் பாடியுள்ள பாடல்கள்

அ) 5 ஆ) 15 இ) 4 ஈ) 7

31) புறநானூற்றில் பயின்று வரும் பா

அ) நேரிசை ஆசிரியப்பா ஆ) குறள் வெண்பா இ) சிந்தியல் வெண்பா ஈ) கலிவிருத்தம்

32) பரிசில் துறை என்பது

அ) பரிசு வேண்டி வாயிலில் நிற்பது ஆ) மன்னன் பரிசளித்துப் புலவரைப் பாராட்டுவது
இ) பரிசு பெற்ற புலவன் மகிழ்ச்சியாக இல்லறம் திரும்புவதுஈ) இவற்றில் எதுவுமில்லை.

33) அதியமானின் அரசவைப் புலவர்

அ) கபிலர் ஆ) பாணர் இ) ஔவையார் ஈ) ஒக்கூர் மாசாத்தியார்

34) சாலைப் போக்குவரத்து உதவிக்கு உரிய தொலைபேசி எண்

அ) 108 ஆ) 101 இ) 103 ஈ) 109



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

35) உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு

அ) இந்தியா ஆ) சீனா இ) பாகிஸ்தான் ஈ) அமெரிக்கா

36) முதல் பன்னாட்டுச் சாலை அமைப்பு மாநாடு நடைபெற்ற இடம், ஆண்டு

அ)பாரிஸ், 1909 ஆ) ரியோடி ஜெனிரொ, 1908இ) ஹாமில்டன், 1907 ஈ) டர்பன்,1915

37) வெண்பா யாப்பு செல்வாக்குப் பெற்ற காலம்

அ) சங்ககாலம் ஆ) சங்கம் மருவிய காலம் இ) காப்பிய காலம் ஈ) ஐரோப்பியர் காலம்

38) சங்கம் மருவிய காலத்தில் வலியுறுத்தப்பட்டது

அ) அறம் ஆ) அரம் இ) மரம் ஈ) மறம்

39) சொல்லுதலை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) விருத்தப்பா

40) வெண்பாவின் ஓசை

அ) அகவலோசை ஆ) செப்பலோசை இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை

41) வெண்பா ................ அமைய வேண்டும் என்பது இன்றியமையாத விதி.

அ) வெண்டளையால் ஆ) கலித்தளையால்இ) ஒன்றிய வஞ்சித்தளை ஈ) ஒன்றா வஞ்சித்தளை

42) வெண்டளை ................. வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

43) வெண்பா ................ வகைப்படும்.

அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு

## 2.குறுவினா:

1.இடையீடு ? எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது.

2.வசனம்,கவிதை, வேறுபாடு தருக.

3."எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்" யார்க்கு?

4.புண் வேறு ___ விழுப்புண் வேறு விளக்குக.

5.நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

6.மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

7.. கிளிமூக்கு என்பது என்ன?

## 3.சிறுவினா:

1. "மூன்றாம் காலம் போல் ஒன்று" எவை, ஏன், விளக்குக.

2. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதைநிறுவுக.

3.எலிக்கு பொறி வைத்தால் விரலும் விழுவதுண்டு
நீர் தேடி அலையும்போது இளநீரும் கிடைக்கும் - இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.

4. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்,

5.மணலில் எபுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள் மாற்றங்களைத் விரித்து எழுதுக

6. சுவடியை உருவாக்கும் முறையை விவரி.

7. பாடாண் திணையை சான்றுடன் விளக்குக.

8. பரிசல் துறையை விளக்குக.

## 4.பெருவினா:

1. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல்,கற்பித்தல் முறைகளைத்தொகுத்து எழுதுக.

3."சாலை விபத்தில்லாத் தமிழ்நாட" இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

# இயல்:5

## நாடென்ப நாட்டின் தலை

**1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1) சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல. அது நம்பிக்கை மையம். காரணம் ?
அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்ஆ) மென்பொருள், வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ அனைத்தும்

2) ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு அடித்தளமாகவும் அதிகார மையமாகவும் விளங்கிய கடற்கரை நகரம்
அ) மதராசப்பட்டினம் ஆ) காவிரிபூம்பட்டினம் இ) புதுச்சேரி ஈ) கொற்கை

3) தென்னிந்தியாவின் நுழைவாயில் என்றழைக்கப்படுவது
அ) திருப்பதி ஆ) சென்னை இ) திருவனந்தபுரம் ஈ) கன்னியாகுமரி

4) ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய நூலகம்
அ) கன்னிமாரா ஆ) திருவனந்தபுரம்இ) சரசுவதிமகால் ஈ) அண்ணாநூற்றாண்டு நூலகம்

5) 1856இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் அமைக்கப்பட்ட இடம்
அ) எழும்பூர் ஆ) கிண்டி இ) இராயபுரம் ஈ) திருவான்மியூர்

6) ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம்
அ) இராணிமேரிக் கல்லூரி ஆ) பச்சையப்பன் கல்லூரி
இ) சென்னைக் கோட்டைக் கல்லூரி ஈ) கிறித்துவக்கல்லூரி

7) இந்தோ-சாரசனிக் கட்டடப் பாணியில் 1768இல் கட்டி முடிக்கப்பட்ட முதல் கட்டடம்
அ) சேப்பாக்கம் அரண்மனை ஆ) சென்னைப்பல்கலைக்கழகம்
இ) ரிப்பன் கட்டடம் ஈ) விக்டோரியா அரங்கு

8) இந்தியாவின் முதல் பொதுநூலகம்
அ) சரசுவதிமகால்ஆ) கொல்கத்தர்இ) கன்னிமாரா நூலகம் ஈ) திருவனந்தபுரம்

9) .................. ஆட்சிக்காலத்தைச் சென்னையின் பொற்காலம் என்பர்.
அ) பிரான்சிஸடே ஆ) எலி யேல்இ) தாமஸ் பிட் ஈ) இராபர்ட் கிளைவ்

10) சென்னை நகராட்சி உருவாக்கப்பட்ட ஆண்டு
அ) 1639 ஆ) 1646 இ) 1688 ஈ) 1768

11) கூவம் ஆற்றை .................... என்றும் அழைத்தனர்.
அ) வடபழனி ஆறு ஆ) திருவல்லிக்கேணி ஆறு இ) மாதவரம் ஆறு ஈ) பல்லாவரம் ஆறு

12) பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை .................... காலத்தில் அமைக்கப்பட்டது.
அ) முதலாம் மகேந்திரவர்மன் ஆ) முதலாம் நரசிம்மவர்மன்
இ) முதலாம் நந்திவர்மன் ஈ) மூன்றாம் நந்திர்வமன்

13) சென்னையில் கிடைத்தவற்றுள் மிகப் பழமையான கல்வெட்டு
அ) பல்லாவரம் கல்வெட்டு ஆ) திருவல்லிக்கேணி கல்வெட்டு



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

இ) மயிலாப்பூர் கல்வெட்டு ஈ) மாதவரம் கல்வெட்டு

14) உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் இத்தொடர் உணர்த்தும் பண்பு
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

15) சென்னையில் வாழ்ந்து வடலூர் சென்று ஆன்மிக மையத்தை ஏற்படுத்தியவர்
அ) வள்ளலார் ஆ) ஞானியாரடிகள்இ) கிருபானந்த அடிகள் ஈ) இவர்களில் எவருமிலர்

16) வள்ளலாரது சிந்தனைகளின் ஊற்றுக்களமாக இருந்தது
அ) வள்ளுவர் கோட்டம் ஆ) கந்த கோட்டம் இ) தில்லை கோட்டம் ஈ) கணபதி கோட்டம்

17) தெய்வமணிமாலையின் பாவகை
அ) கலி விருத்தம் ஆ) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
இ) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஈ) பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

18) இராமலிங்க அடிகள் பிறந்த ஊர்
அ) சிதம்பரத்தை அடுத்த மருதூர் ஆ) கடலூரை அடுத்த வடலூர்
இ) தஞ்சையை அடுத்த வல்லம் ஈ) மயிலாடுதுறையை அடுத்த தேரழுந்தூர்

19) திருவருட்பா ................. திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.
அ) நான்கு ஆ) ஆறு இ) பன்னிரு ஈ) பதினாறு

20)மயிலாப்பூரில் இறைவனுக்குக் கொண்டாடப்படும் விழா
அ) பங்குனி உத்திர விழா ஆ)திருக்கார்த்திகை இ) சித்திரா பௌர்ணமி ஈ) தைப்பூச விழா

21) தேவாரம் தந்த திருஞானசம்பந்தர் முத்துப்பல்லக்கில் செல்வது போன்ற காட்சி இடம்பெற்றுள்ள 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம் அமைந்துள்ள இடம்
அ) மயிலாப்பூர் ஆ) திருநெல்வேலி இ) திருவொற்றியூர் ஈ) வள்ளியூர்

22) திருஞானசம்பந்தரின் பாடல்களைத் தொகுத்தவர்
அ) சேக்கிழார் ஆ) இராசராச சோழன்இ) நம்பியாண்டார் நம்பி ஈ) இவர்களில் எவருமிலர்

23) சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் பாடிய பாடல்களின் தொகுப்பு பன்னிரு திருமுறைகளில்................ என்று அழைக்கப்படுகின்றன.
அ) தேவாரம் ஆ) திருவாசகம்இ) திருச்சதகம் ஈ) திருத்தொண்டத்தொகை

24) “விளியறி ஞமலி” இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

25) தலைக்குளம் என்னும் கதையின் ஆசிரியர்
அ) பீர்முகமது ஆ) தோப்பில் முகமது மீரான்இ) அப்துல் ரகுமான் ஈ) ஜெயகாந்தன்

26) தலைக்குளம் என்னும் கதை இடம்பெற்றுள்ள சிறுகதைத் தொகுப்பு
அ) துறைமுகம் ஆ) கூனன் தோப்பு இ) சித்தன்போக்கு ஈ) ஒரு குட்டித் தீவின் வரைபடம்

27) தமிழக அரசின் விருது பெற்ற தோப்பில் முகமது மீரான் படைப்புகள்
அ) துறைமுகம்,கூனன்தோப்பு ஆ) சாய்வு நாற்காலி ,துறைமுகம்
இ) ஒரு குட்டித் தீவின் வரைபடம் ஈ) கூனன்தொப்பு, சாய்வு நாற்காலி

28) படிமம் என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

29) காலை இளம் வெயில் நன்றாக மேய தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில் இக்கவிதையில் ..............பயின்று வந்துள்ளது.
அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

30)எயிற்பட்டினம் உள்ள ஓய்மாநாட்டை ஆட்சி செய்தவன்
அ) அதியமான் ஆ) நல்லியகோடன் இ) பேகன் ஈ) நளங்கிள்ளி

## 2.குறுவினா:

1.கலிவிழா, ஒளிவிழா - விளக்கம் தருக.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2."தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே" தொடருக்குப் பதவுரை எழுதுக.
3."பெருங்கடல் வேட்டச்சத்துச் சிறு குடிப்பரதவர்" தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.
4."மாந்தோப்பின் வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?
5.கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
6. படிமம் என்றால் என்ன?
7. மெட்ராஜ் ரெக்கார்ட் ஆபீஸ் குறிப்பு வரைக.

## 3.சிறுவினா:

1. "நெல்லின் நேரே வெண்கல் உப்பு" இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.
2. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
3. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?
4. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில்,இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
5. சென்னை அறிவின் நகரம் என்பதற்கு சான்று தருக.
6. இந்தோ- சாரசனிக் கட்டடக்கலை விளக்குக.
7.அகநானூற்றுள் பாடலில் வரும் நெய்தல் திணையில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் பற்றி விளக்குக.
8.சொற்பொருள் பின்வரு நிலையணியை சான்றுடன் விளக்குக.

## 4.பெருவினா:

1. சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப்பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?
2."ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவமும் உண்டு"நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரத்தைக்குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.
3."கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# இயல்:6

## சிறுகை அளாவிய கூழ்

**1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1) வேறுபட்டதைக் குறிப்பிடுக.
அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

2) அசையும் உருவங்களைப் படம்பிடிக்கும் கருவியைக் கண்டுபிடித்தவர்
அ) லூமியர் சகோதரர்கள் ஆ) தாமஸ் ஆல்வா எடிசன்இ) ஜார்ஜ் மிலி ஈ) இவர்களில் எவருமிலர்

3) படப்பிடிப்புக் கருவியோடு திரையிடும் கருவியையும் சேர்த்து திரைப்படம் என்னும் விந்தையைஉலகுக்கு அளித்தவர்கள்
அ) லூமியர்சகோரார்கள் ஆ) எடிசன்சகோதரர்கள்
இ)ஜார்ஜ்சகோதரர்கள்ஈ)இவர்களில்எவருமிலர்

4) திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் எனக் கண்டுபிடித்தவர்
அ) லூமியர் ஆ) தாமஸ் ஆல்வா எடிசன் இ) ஜார்ஜ் மிலி ஈ) இவர்களில் எவருமிலர்

5) சார்லி சாப்ளின் பிறந்த இடம்
அ) தி ஹேக் ஆ) இலண்டன் இ) நியூயார்க் ஈ) பாரிஸ்

6) சார்லி சாப்ளினுக்கு வாழ்நாள் சாதனையாளர் என்னும் வகையில் .................... விருது வழங்கப்பட்டது.
அ) கோல்டன் குளொப் ஆ)ஆஸ்கார்இ) பிரவு டுஆப் அமெரிக்கா ஈ) கோல்டன் வேர்ல்டு

7) ஆர்ப்பரிக்கும் கடல்:அதன் அடித்தளம்
மௌனம்: மகாமௌனம் அடிகள் புலப்படுத்துவது
அ) இரைச்சல் ஆ) குறைக்கும் கூத்தாடும் இ) நிறைகுடம் நீர்தளும்பல் இல் ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது.

8) கவிஞர் நகுலனின் இயற்பெயர்
அ) டி.கே. நீலமேகம் ஆ) டி.கே. துரைசாமி இ) இராகோபாலன் ஈ) கிருஷ்ணமூர்த்தி

9) கவிஞர் நகுலன் யாருடைய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்,
அ) பாரதி ஆ) பாரதிதாசன் இ) வாணிதாசன் ஈ) கண்ணதாசன்

10) "இருப்பதற்கென்றுதான் வருகிறோம் இல்லாமல் போகிறோம்" என்று எழுதியவர்
அ) நாகூர் ரூமி ஆ) பாரதிதான் இ) நகுலன் ஈ) ஆத்மாநாம்

11) ஏழு ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் ................ தொடர்களில்வெளிப்படும் செய்திகள்.

1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.
2. ஈராறு வயதில் அரங்கெற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1.சரி 2.தவறு ஆ) 1.தவறு 2.சரிஇ) 1.தவறு 2.தவறு ஈ) 1.சரி 2.சரி

12) சிலப்பதிகாரத்திலுள்ள அரங்கேற்றுக் காதை அமைந்துள்ள காண்டம்
அ) புகார் ஆ) வஞ்சிஇ) மதுரை ஈ) இவற்றில் எதுவுமில்லை

13) இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுபவை
அ) நீலகேசி, குண்டலகேசி ஆ) உதயணகுமாரகாவியம், நாககுமார காவியம்
இ) சிந்தாமணி,சூளாமணி ஈ) சிலப்பதிகாரம், மணிமேகலை

14) சிலப்பதிகாரத்தை இயற்றியவர்
அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைச்சாத்தனார்இ) திருத்தக்கத்தேவர் ஈ) நக்கீரர்

15) சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும் என்று கூறியவர்
அ) திரு.வி.க. ஆ) பாரதி இ) பாரதிதாசன் ஈ) ம.பொ.சி.

16) இந்திரனின் மகன்
அ) சனகன் ஆ) சயந்தன் இ) அபினந்தன் ஈ) மாயன்

17) அரங்கேற்றத்தை வெற்றிகரமாக முடிக்கும் ஆடல்மகளுக்கு அளிக்கப்படுவது
அ) தலைக்கோல் ஆ) செங்கோல் இ) வைரமணி ஈ) அரசாட்சி

18) தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடு.
அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது

19) பேராசிரியர் என்பார் ................. உரையாசிரியர் ஆவார்.
அ) நன்னூல் ஆ) சிலப்பதிகாரம் இ) யாப்பருங்கல ஈ) தொல்காப்பிய

20) தமிழில் கிடைக்கப் பெற்ற முதல் இலக்கண நூல்
அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்இ) தொன்னூல் விளக்கம் ஈ) புறப்பொருள் வெண்பாமாலை

21) தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர்
அ) இளம்பூரணர் ஆ) சேனாவரையர் இ) பேராசிரியர் ஈ) நச்சினார்க்கினியர்

22) தொல்காப்பியத்தினை இயற்றியவர்
அ) அகத்தியர் ஆ) தொல்காப்பியர் இ) சமணமுனிவர் ஈ) பவணந்தி முனிவர்

23) நடிப்புலகின் சக்கரவர்த்தி எனப்படுபவர்
அ) மார்லன் பிராண்டொ ஆ) சார்லி சாப்ளின்இ) சிவாஜி கணேசன் ஈ) அர்னால்டு

24) சிவாஜி கணேசனுக்குச் செவாலியர் விருதளித்த அரசு
அ) ஆங்கில அரசு ஆ) பிரெஞ்சு அரசு இ) இந்திய அரசு ஈ) இலங்கை அரசு

25) வி.சி. கணேசனுக்கு சிவாஜி கணெசன் என்று பெயரிட்டவர்
அ) அறிஞர் அண்ணா ஆ) கு.காமராசர்இ) தந்தை பெரியார் ஈ) மு. கருணாநிதி

26) ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்
அ) சிவஞான முனிவர் ஆ) மயிலை நாதர் இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்

27) EPOS என்னும் கிரெக்கச் சொல்லின் பொருள்
அ) சொல் &பாடல் ஆ) எழுத்து & கவிதைஇ) வாக்கியம் & வரலாறு ஈ) பக்தி & பண்பாடு

28) நன்னூலுக்கு உரை எழுதியவர்
அ) மயிலைநாதர் ஆ) சி.வை.தாமோதரனார்இ) சேனாவரையர் ஈ) இளம்பூரணர்

29) பஞ்சகாப்பியம் என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்ட நூல்
அ) நன்னூல் ஆ) தமிழ்விடுதூது இ) பொருள்தொகை நிகண்டு ஈ) திருத்தணிகை உலா

30) ஆட்டனத்தி ஆதிமந்தி என்னும் குறுங்காப்பியத்தை இயற்றியவர்
அ) பாரதிதாசன் ஆ) கண்ணதாசன் இ) கவிமணி ஈ) புலவர் குழந்தை

31) திண்ணியர் என்பதன் பொருள் தருக.
அ) அறிவடையார் ஆ) மன உறுதியுடையவர்இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## 2.குறுவினா:

1.எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

2.பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும், சான்று தருக.

3."மூச்சு நின்றுவிட்டால்
பேச்சும் அடங்கும் கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.

4.புதுக்கவிதை என்றால் என்ன?

5.அண்மைக்காட்சித் துணிப்பு என்றால் என்ன?

6.நேரெட்டர் என்றால் என்ன?

## 3.சிறுவினா:

1.நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

2. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கானசூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.

3. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும்முயற்சியே என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக.

4. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

5. நல்ல திரைப்படம் என்பது எது ? விளக்குக.

6. குலஷோவ் விளைவு விளக்குக.

7.தொழில் உவமை அணியை சான்றுடன் விளக்குக.

8.உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று. இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்கு.

## 4.பெருவினா:

1.மகாநடிகரைக் கண்ட பாலசந்திரன் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

2.திரைப்படைத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா, அல்லது கலைகளின் சங்கமமா,
பார்வையைக் கட்டுரையாக்குக.

3. உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக..



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# இயல்:7

## அருமை உடைய செயல்

**1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1) பலர் துஞ்சவும் தாம் துஞ்சான் விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
அ) சோழன் நெடுங்கிள்ளியை - பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை - கோகூர் கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை - கபிலர் ஈ) கரிகாலனை -உருத்திரங்கண்ணனார்
2) சீனத்தில் வழங்கும் யாங்சௌ கதை ................. பற்றியது.
அ) இவ்வுலக வாழ்வை ஆ) நேர மேலாண்மையை இ) கொல்லாமையை ஈ) சொர்க்கத்தை
3) அவ்வைக்கு நெல்லிக்கனியைத் தந்தவன்
அ) பேகன் ஆ) அதியன் இ) பாரி ஈ) ஓரி
4) இலக்கியத்தில் மேலாண்மை என்னும் நூலை எழுதியவர்
அ) சகாயம் ஆ) வெ. இறையன்பு இ) இந்திரா பார்த்தசாரதி ஈ) மேலாண்மை பொன்னுசாமி
5) வெ. இறையன்புவின் எந்த நூல் 1995ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கானபரிசைப் பெற்றது,
அ) வாய்க்கால் மீன்கள் ஆ) ஏழாவது அறிவு இ) உள்ளொளிப்பயணம் ஈ) மூளைக்குள் சுற்றுலா
6) அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்க சொல்வது
அ) கடந்தகால துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதைஇ) பச்சயம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்
7) அதிசய மலர் என்னும் கவிதையின் ஆசிரியர்
அ) ஆத்மாநாம் ஆ) நாகூர்ரூமி இ) தமிழ்நதி ஈ) இரா. மீனாட்சி
8) கவிஞர் தமிழ்நதியின் இயற்பெயர்
அ) கலைச்செல்வி ஆ) தமிழ்ச்செல்வி இ) கலைவாணி ஈ) வாணி
9) கவிஞர் தமிழ்நதி புலம்பெயர்ந்து சென்றுள்ள நாடு
அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா இ) கனடா ஈ) ஆஸ்திரேலியா
10) உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்
அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்
11) தோட்டக் கூலிகளாகத் தமிழர்களை வெள்ளையர் சேர்க்குமிடங்கள்
அ) இலங்கைத் தீவு, அந்தமான் தீவு ஆ) மலேசியா, சிங்கப்பூர்
இ) ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஈ) அமெரிக்கா, கனடா
12) யாருடைய பொய்யுரை கண்டு மயங்காதீர் என்று தேயிலைத் தோட்டப் பாட்டுக் கூறுகிறது,



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

அ) கங்காணி ஆ) வெள்ளையர் இ) நாட்டாமை ஈ) இவர்களில் எவருமிலர்

13) யானை புக்க புலம்போலத் இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்

அ) தனக்குப் பயன்படும் பிறருக்குப் பயன்படாதுஆ) தனக்கும் பயன்படாது பிறருக்கும் பயன்படாது

இ) பிறருக்குப் பயன்படும் தனக்குப் பயன்படாது ஈ) தனக்கும் பயன்படும் பிறருக்கும் பயன்படும்

14) காய்நெல் அறுத்து என வரும் புறநானூற்றுப் பாடலின் பாவகை

அ) கலி விருத்தம் ஆ) அறுச்சீர்க்கர்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் இ) நேரிசை ஆசிரியப்பா ஈ) சிந்தியல் வெண்பா

15) புறநானூற்றை உ.வே.சா. அச்சில் பதிப்பித்த ஆண்டு

அ) 1884 ஆ) 1894 இ) 1896 ஈ) 1910

16) பிசிர் என்பது

அ) எஞ்சிய வாழ்க்கை ஆ) பாண்டிய நாட்டில் இருந்த ஓர் ஊர்

இ) சோழநாட்டில் கிடைத்த பொருள் ஈ) இவற்றில் எதுவுமில்லை

17) ஆந்தையார் என்பது

அ) இயற்பெயர் ஆ) காரணப்பெயர் இ) பட்டப்பெயர் ஈ) குலப்பெயர்

18) அறிவுடை நம்பி ஆண்ட நாடு

அ) சேரநாடு ஆ) சோழநாடு இ) பாண்டிய நாடு ஈ) பல்லவ நாடு

19) புகளூர் கல்வெட்டின் காலம் ................. நூற்றாண்டு.

அ) முதலாம் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) நான்காம்

20)தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர்

அ) கே.வி. சுப்பிரமணியனார் ஆ) ஐராவதம் மகாதேவன்

இ) தி.வை. சதாசிவ பண்டாரத்தார் ஈ) இவர்களில் எவருமில்லை

21) சங்ககாலக் கல்வெட்டுகளும் என் நினைவுகளும் என்ற ஐராவதம் மகதேவன் எழுதிய கட்டுரைவெளிவந்த இதழ்

அ) எழுத்து ஆ) கணையாழி இ) கல்வெட்டு ஈ) தென்றல்

22)ஐராவதம் மகாதேவன் கல்வெட்டு ஆய்வில் ஈடுபட்ட ஆண்டுகள்

அ) 20 ஆ) 30 இ) 40 ஈ) 25

**2.குறுவினா:**

1.எந்தவொரு பொருளைப் பயன்படுத்தும்போதும் அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பை நாம்சிந்திப்பதில்லை. ஒரு தேநீரைப் பருகும்போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.

2. அறிவுடை வேந்தனின்நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

3.செவியறிவுறூஉ துறையை விளக்குக.

4.தொன்மம் ? விளக்கம் தருக.

5. பருவததே பயிர் செய் நேர மேலாலண்மையோடு பொருத்தி எழுதுக.

6.பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.

7.உன்மனம் ஒரு பாற்கடல் அதைக் கடைந்தால்
அமுதம் மட்டுமல்லஆலகாலமும் வெளிப்படும் என்பதை
நீ அறிவாய் அல்லவா, ? இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம் யாது?

**3.சிறுவினா:**

1.அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்,

2.எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப்பூச்சியொன்று
பறவைகளும் வரக் கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கும் தருக.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே -உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.
4. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
5. சீனக்கதை வாயிலாக நேர மேலாண்மையை விளக்குக.
6. காவிரிப் பூம்பட்டினத்து துறைமுகம் பற்றிக் குறிப்பு வரைக.
7.பாடாண் திணையை சான்றுடன் விளக்குக
8.செவியறிவுறூஉ துறையை விளக்குக.

**4.பெருவினா:**

1.எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன ?
2. சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது?
3.நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

# இயல்:8

# எல்லா உயிரும் தொழும்

**1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1) ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப் பெற்ற மயிலைசீனி.வேங்கடசாமிஎழுதிய நூல்
அ)பௌத்தமும் தமிழும் ஆ)இசுலாமும் தமிழும் இ)சமணமும் தமிழும் ஈ)கிறித்துவமும் தமிழும்
2) மயிலை சீனி. வேங்கடசாமியின் முதல் நூல்
அ) கிறித்துவமும் தமிழும் ஆ) பௌத்தமும் தமிழும் இ) சமணமும் தமிழும் ஈ)இவற்றில் இல்லை
3) மயிலை சீனி. வேங்கடசாமி புலமை பெற்றிருந்த எழுத்துகள்
1)வட்டெழுத்து 2) கோலெழுத்து 3) தமிழ் பிராம்மி
அ) 1,2 - சரி ஆ) 2,3 - சரி இ) மூன்றும் சரி ஈ) 3 - மட்டும் தவறு
4) மத்தவிலாசம் என்ற நாடக நூலை இயற்றியவர் ……………… அதனை ஆங்கிலம் வழியாகத்தமிழாக்கியவர்.
அ) மகேந்திரவர்மன், மயிலை சீனி. வேங்கடசாமிஆ) நரசிம்மவர்மன், தெ.பொ.மீ
இ) மூன்றாம் நந்திவர்மன், விபுலானந்த அழகள்ஈ) இராசராசசோழன், கவிமணி
5) நான் வெற்றுவெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்திசுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது.
அ) தமது வீட்டு முகவரிஆ) தமது குடும்பத்தைஇ) தமது அடையாளத்தை ஈ) தமது படைப்புகை
6) சுகந்தி சுப்பிரமணியன் என்பார் தமிழின் ……………… பெண் கவிஞர்களில் குறிப்பிடத்தகுந்தவர்.
அ) மரபு ஆ) புதுக்கவிதை இ) நவீன ஈ) பின்நவீன
7) சுகந்தி சுப்பிரமணியத்தின் படைப்புகளில் பாடுபொருள்
அ) தனித்து விடப்பட்ட பெண்ணின் அனுபவங்கள்ஆ) கூட்டுக் குடும்பத்தில் பெண்களின் சவால்கள்இ) மணமாகாத பெண்களின் அவலம் ஈ) அறிவியல் உலகில் பெண்கள்
8) ஜான் பன்யன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்னும் ஆங்கில நூலின் தழுவலாக அமைந்த படைப்பு
அ)இரட்சணிய யாத்திரிகம் ஆ) இரட்சணிய மனோகரம்இ)மனோன்மணியம்ஈ)போற்றித்திருஅகவல்
9) இரட்சணிய யாத்திரிகத்தின் ஆசிரியர்
அ) வீரமாமுனிவர் ஆ) வேநாயகம் இ) எச்.ஏ.கிருட்டிணனார் ஈ) ஜி.யு. போப்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

10) இரட்சணிய யாத்திரிகம் என்பது
அ) ஒரு பெரும் உருவகக் காப்பியம் ஆ) சிற்றிலக்கியம் இ) சிறு காப்பியம் ஈ) காப்பியம்
11) இரட்சணிய யாத்திரிகத்தின் பாடல்கள்
அ) 3566 ஆ) 3677 இ) 3766 ஈ) 3244
12) இரட்சணிய யாத்திரிகத்தில் உள்ள பருவங்கள்
அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு
13) கிறித்துவக் கம்பர் என்று போற்றப்பட்டவர்
அ) வீரமாமுனிவர் ஆ) எச்.ஏ. கிருட்டிணனார் இ) ஜி.யு. போப் ஈ) ஈராசு பாதிரியார்
14) சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி
15) கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்
அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக் கொடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்
16) ஆவியர் குலத்தில் தோன்றியவன்
அ) பாரி ஆ) ஓரி இ) காரி ஈ) பேகன்
17) தனியொருவனாக இருந்து ஈகையின் பாரத்தைத் தாங்கி செல்பவன்
அ) அதிகன் ஆ) பேகன் இ) நள்ளி ஈ) நல்லியக்கோடன்
18) ஆவினன்குடி "பொதினி" என்றழைக்கப்பட்டு தற்போது ................. எனப்படுகிறது.
அ) பழனி ஆ) பிரான் மலை இ) திருக்கோவிலூர் ஈ) தர்மபஜரி
19) சிறுபாணாற்றுப்படையை இயற்றியவர்
அ) மாங்குடி மருதனார்ஆ) நல்லூர் நத்தத்தனார் இ)வெள்ளைக்குடி நாகனார்
ஈ)பூதஞ்சேந்தனார்
20)திண்டிவனத்தைச் சார்ந்தது .................. நாடு என அழைக்கப்பட்ட நிலப்பகுதி
அ) மலையமான் ஆ) ஓய்மா இ) தகடூர் ஈ) பறம்பு
21) ஓய்மாநாட்டு மன்னனான நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல்
அ) சிறுபாணாற்றுப்படை ஆ) பெரும்பாணாற்றுப்படை இ)திருமுருகாற்றுப்படை
ஈ)பொருநாற்றுப்படை
22) சாந்தா தத் .................. சேர்ந்த பெண் படைப்பாளர்.
அ) சென்னையைச் ஆ) சிதம்பரத்தைச் இ) காஞ்சிபுரத்தைச் ஈ) வடலூரைச்
23) கோடை மழை என்னும் சிறுகதை வெளியான இதழ்
அ) கோகுலம் ஆ) அமுதசுரபி இ) கணையாழி ஈ) குங்குமம்
24) கோடை மழை என்னும் சிறுகதைக்குச் சிறந்த சிறுகதைக்கான விருதையளித்த அமைப்பு
அ) இலக்கியச் சிந்தனை ஆ) பாரதி மன்றம் இ) முத்தமிழ் மன்றம் ஈ) தமிழ் இலக்கியப் பேரவை
25) சாந்தா தாத்தின் மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ளது
அ) சாகித்திய அகாதமி ஆ) நியூபுக் செஞ்சுரி இ) கிழக்கு பதிப்பகம்
ஈ)மணிவாசகம்பதிப்பகம்
26) சாந்தா தத்தின் கதைகளில் வெளிப்படும் அடிப்படைப் பண்பு
அ) பெண்ணியம் ஆ) கல்வி இ) மனிதநேயம் ஈ) அரசியல்
27) கோடை மழை கதையின் உட்பொருள்
அ) முதியோர்களை அரவணைப்பது ஆ) இளைஞர்களின் காதல்
இ) வறண்ட நிலத்தின் நிலை ஈ) ஏழைகளின் கண்ணீர்
28) சங்க இலக்கியத்தில்,அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும்குறியீடுகள்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

29) மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்திஎது,

அ) குறியீடு ஆ) படிமம்இ) அங்கதம் ஈ) தொன்மம்

30) சங்க இலக்கியப் பாடல்களில் வரும் உள்ளுறை உவமம் என்னும் இக்காலத்தில் இலக்கிய உத்தியை .................. எனலாம்.

அ) தொன்மம் ஆ) படிமம் இ) குறியீடு ஈ) புதுக்கவிதை

## 2.குறுவினா:

1."தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்" நூல் பற்றிக் குறிப்பு வரைக.

2."விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டேன்- யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்,

3.முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

4.இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

5.குறியீட்டு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக.

6.மயிலையாரின் சொல்லாய்வு பணியினை விளக்குக.

7.குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.

## 3.சிறுவினா:

1.கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப் படுத்துக.

2."ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

3.கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

4.மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

5.மயிலையாரின் ஆவணப்பணியினை விளக்குக.

6. பீட்டுருவாக்க பணியில் மயிலையாரின் பங்கு யாது?

7. வாகைத் திணையை சான்றுடன் விளக்குக

8.நிரல்நிறை அணியை சான்றுடன் விளக்குக

## 4.பெருவினா:

1. எச்.ஏ. கிருட்டிணனார் "கிறித்தவக் கம்பரே" என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

2.மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

3. கோடை மழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

You Tube

Zoom Touch Below Links Download!


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com